உ

சிவமயம்

திருவருட்பயன்

ஸ்ரீ உமாபதி சிவம்

திருவார் கயிலைத் திருநந்தி தேவர் திருமரபில்
வருமா சிரியன் மறைஞான சம்பந்த மாகுரவன்
அருள்சார் உமாபதி தேசிகன் செஞ்சரணாம்புயமென்
மருவார் மலரிணை யுள்கி வழுத்தி வணங்குதுமே.

சைவ சித்தாந்த சபை
சங்கரன்கோவில்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வெளியீடு எண் : 61

ஸ்ரீமத் உமாபதி சிவாச்சாரியார்

அருளிச் செய்த

திருவருட்பயன்

உரையாசிரியர் :

திருவாவடுதுறை ஆதீன வித்துவான்

சித்தாந்த பண்டித பூஷணம்

சிவஸ்ரீ. **ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை** அவர்கள்

சைவ சித்தாந்த சபை

53-வது ஆண்டு விழா வெளியீடு

3.3.2006 வெள்ளிக்கிழமை

வெளியிட்டோர் :

சைவ சித்தாந்த சபை

246, வடக்கு ரதவீதி, சங்கரன்கோவில்.

உ

சிவமயம்

சைவ சித்தாந்த சபை,

சங்கரன்கோவில்.

திருவருட்பயன் மறுபதிப்பு வெளியீடு

சிவதீக்ஷா குரு,

கூனம்பட்டி ஆதினம் 56-வது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகள்

அவர்களது ஆசியுடன் வெளியிடப்படுகிறது.

மறு பதிப்புரை

வைதிக சைவ சமயத்தின் பிரமாண நூற்கள் வடமொழியிலுள்ள 4 வேதங்களும், 18 சிவாகமங்களும், தமிழிலுள்ள 14 சித்தாந்த சாத்திரங்களும், 12 திருமுறைகளும் ஆகும்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் சைவ சமயிகளுக்கு இலக்கணம் போன்றது. இந்த 14 சாத்திரங்களில் எட்டினை அருளிச் செய்தவர் கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதி சிவாச்சாரியார் அவர்கள். சிவபிரான் அருளால் "பெற்றான் சாம்பான்" என்பவருக்கு தீக்கை செய்து முத்தி அளித்தவர்கள். எனவே அவர்களது நூற்களின் பயிற்சி முத்திக்கு வழி என்பதைக் கூறத் தேவையில்லை. சாத்திரங்களுக்குப் பல உரைகள் இருப்பினும், அவையெல்லாம் தற்போது கிடைத்தற்கு அரியவையாயின. சங்கரன்கோவில் சைவ சித்தாந்த சபையின் தோற்றத்திற்குக் காரணமான திருவாவடுதுறை ஆதீன வித்துவான் பேட்டை சிவஸ்ரீ. **ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை** அவர்கள் சித்தாந்த அட்டகத்தில் ஒன்றாகிய திருவருட்பயனுக்கு எழுதிய புத்துரையை சபை 1985-ல் வெளியிட்டது. அதுவும் தற்போது கிடைப்பதற்கு அரிதாகிவிட்டதால், மறுபதிப்பு அவசியமாயிற்று. சித்தாந்த சாத்திரங்களைக் கற்கும் மாணவர்களுக்கு இந்நூல் மிகுந்த பயனுடையது. திருவருளின் பயனை அடைய அனைவரும் இந்நூலை முறையாகக் கற்கவேண்டும்.

இந்த மறு பதிப்பினை சபை தனது 61-வது வெளியீடாக 53-வது ஆண்டு விழாவில் வெளியிடவேண்டும் என்று கூறியபோது மகிழ்ச்சியுடன் தனது செலவில் அதனை அச்சிட மனமுவந்து முன்வந்த திரு. C.S.M.S. ஜுவல்லர்ஸ் & ஸ்ரீ சங்கரகோமதி ஜுவல்லரி மார்ட் உரிமையாளர், சிவநேயச் செல்வர். **S. சங்கரசுப்பிரமணியன்** அவர்களுக்கு சபை தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. அவர்களது தந்தையார் சிவஸ்ரீ. **C.S.M. சண்முகமுதலியார்** அவர்கள்

ஸ்ரீ கோமதியம்மன் திருக்கோவில் தக்காராகவும், பல திருக்கோவில்களில் தர்மகர்த்தாவாகவும் இருந்து சைவத்திற்கு அரும்பணி ஆற்றியவர்கள். திருக்கோவில் திருவிழாக்களில் தேவார இன்னிசை முழங்க ஆண்டுதோறும் உபயம் செய்தவர்கள். அன்னார் ஞாபகார்த்தமாக இந்நூலை சபை தனது 61-வது வெளியீடாக வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறது.

இந்த நூலின் வடிவாக்கத்திற்கு உறுதுணையாக இருந்த சைவ சித்தாந்த சபை நூல் வடிவாக்கக் குழுவினருக்கும், குறித்த நேரத்தில் கம்ப்யூட்டர் டைப்செட்டிங் செய்து கொடுத்த ரவி கம்ப்யூட்டர்ஸ் மற்றும் அச்சிட்டு வழங்கிய ஸ்ரீ ஜெயம் அச்சகத்தாருக்கும் எங்களது மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சைவ அன்பர்கள் இந்நூலை நன்கு கற்று திருவருட்பயன் பெறுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்,

சைவ சித்தாந்த சபையார்.

சங்கரன்கோவில்.

உ

திருச்சிற்றம்பலம்
ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

திருவருட்பயன்

பதவுரை

காப்பு.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

நல்குஞ்சரக் கன்று-நல்ல இளமை பொருந்திய யானைமுகக் கடவுள்; நண்ணில்-(மனத்தில்) வீற்றிருந்தால்; கலைஞானம்-வேத ஆகம முதலிய சாத்திரத் தொகுதி; கற்கும் சரக்கு அன்று-ஓதியுரணரப்படும் நூற்றொகுதி அன்று (ஓதாமலே அறியப்படும்); காண்-நீ இதை அறிவாயாக.

விநாயகப்பெருமானை வணங்குவார்க்கு எல்லா
நூல்களும் படியாமலே விளங்கும்.

நூல்.

1. பதிமுது நிலை.

1. *அகர வுயிர்போ லறிவாகி யெங்கு*
நிகரிலிறை நிற்கு நிறைந்து.

நிகர் இல் இறை -ஒப்பில்லாத சிவபிரான்; அறிவு ஆகி-எல்லா வுயிர்களுக்கும் அறிவாக இருந்து; எங்கும்-(உயிர், உலகம், என்னும்) அனைத்தினும்; அகர உயிர்போல்-(எழுத்துக்களி லெல்லாம் வியாபித்து அவைகளுக்குத் தலைமையாய் நிற்கும்) 'அ' என்னும் உயிரெழுத்துப் போல; நிறைந்து நிற்கும்-பூரணமாய் (வியாபித்துத் தலைமையெய்தி) நிற்பார்.

சிவபிரான் வியாபகருந் தலைவருமாவார்.

2. *தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி*
பின்னமிலா னெங்கள் பிரான்.

எங்கள் பிரான்-எங்களுடைய சிவபிரான்; தன் நிலைமை-தமது பேரின்ப நிலைமையை; மன் உயிர்கள்-நிலைபெற்ற ஆன்மாக்கள்;

சார-பொருந்தும்படி; தரும்-உபகரிக்கின்ற; சத்தி-திருவருளோடு; பின்னம் இலான்-பிரிப்பின்றி நிற்பார்.

சிவம் சத்தியின் நீக்கமின்றி நிற்கும்.

3. பெருமைக்கு நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றி
னருமைக்கு மொப்பின்மை யான்.

பெருமைக்கும்-பெரியதிற்கெல்லாம் பெரியதாயிருத்தலினும்; நுண்மைக்கும் - சிறியதிற்கெல்லாஞ் சிறியதாயிருத்தலினும்; பேர் அருட்கும்-மிகுந்த கிருபையோடிருத்தலினும்; பேற்றின் அருமைக்கும்-முத்திச்செல்வமாயிருக்கின்ற அருமையினும்; ஒப்பு இன்மையான்-சிவபிரான் நிகரில்லாதவர்.

சிவபிரான் நிகரில்லாதவர்.

4. ஆக்கி யெவையு மளித்தா சுடனடங்கப்
போக்குமவன் போகாப் புகல்.

எவையும்-உலகமனைத்தையும்; ஆக்கி-படைத்து; அளித்து-காத்து; ஆசுடன்-முதற்காரணமாகிய மாயையில்; அடங்க-ஒடுங்கும்படி; போக்கும் அவன்-அழிக்கின்ற சிவபிரான்; போகப்புகல் - (எல்லாவற்றிற்குங்) கெடாத புகலிடமாயிருக்கின்றார்.

சிவபிரானே முத்தொழிற்கர்த்தா.

5. அருவு முருவு மரிஞர்க் கரிவா
முருவ முடையா னுளன்.

அறிஞர்க்கு-ஞானிகளுக்கு; அறிவாம் உருவம் - ஞானமாகிய திருமேனியை; உடையான் - உடையவராகிய சிவபிரான்; அருவும் - அருவத்திருமேனிகளையும்; உருவும் - உருவத்திருமேனி களையும்;(அருஉருவும்) - அருவுருவத்திருமேனியையும்; உளன் - கொண்டவராயிருக்கின்றார்.

சிவபிரானுக்கு ஞானமாகிய திருமேனியேயன்றி
உருவ முதலிய மூன்றுதிருமேனிகளுமுண்டு.

6. பல்லா ருயிருணரும் பான்மையென மேலொருவ
னில்லாதா னெங்க ளிறை.

பல் ஆர் உயிர் - பல்வேறு தன்மைகள் இயல்பாக அமைந்த உயிர்கள்; உணரும் பான்மை என - (அறிவிக்க) அறியுந்தன்மையைப் பொருந்தியிருத்தல் போல; எங்கள் இறை - எங்களுடைய சிவபிரான்; மேல் ஒருவன் இல்லாதான் - (தம்மைத் தொழிற் படுத்தத்) தமக்கொரு தலைவனை யில்லா தவராவார்.

சிவபிரானுக்கு வேறொரு முதல்வர் இல்லை.

7. ஆனா வறிவா யகலா னடியவர்க்கு
வானாடர் காணாத மன்.

வான் நாடர் - (பிரமவிட்டுணுமுதலிய) தேவலோகவாசிகளுங்கூட; காணாத மன் - கண்டுகொள்ளாத சிவபிரான்; ஆனா அறிவாய் - (யாண்டுங்) கெடாத பேரறிவாயிருந்து; அடியவர்க்கு - மெய்யடியார்களைமட்டும்; அகலான் - விட்டு நீங்கான்.

சிவபிரான் அடியார்க்கெளியர்.

8. எங்கு மெவையு மெரியுறுநீர் போலேகந்
தங்குமவன் றானே தனி.

அவன் தானே - அச்சிவபிரான்; எங்கும் - உலகத் தொகுதியிலும்; எவையும் - உயிர்த்தொகுதியிலும்; நீர் உறு எரிபோல் - வெந்நீரிற் பொருந்திய சூடுபோல; ஏகம்தங்கும் - (இரண்டறக்) கலந்து தங்கி நிற்பார் ; (ஆயினும்) தனி - (அவர் அவ்விரண்டு தொகுதிகளிலும் தோயாமல்) தனித்தே நிற்பார்.

சிவபிரான் பிரபஞ்சக்கலப்பால் தாக்கப்படமாட்டார்.

9. நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்.

நண்ணார்க்கு - தம்மை வழிபடாதார்க்கு; நலம் இலன் - இன்ப நலங்கொடார்; நண்ணினர்க்கு - தம்மை வழிபட்டார்க்கு; நல்லன் - இன்ப நலங்கொடுப்பார். (ஆனால்) சலம் இலன் - கோபம் என்பது சிறிதும் இல்லாதவர்; பேர் சங்கரன் - (ஆகையால் அவரது) பெயர் சங்கரன் (எனப்படும்); சம் - இன்பம் கரன் - செய்பவன்.

'சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால்; நலமில னாடொறு நல்கு வானலன்' என்பது தமிழ்வேதம்.

சிவபிரான் எல்லாருக்கும் இன்பஞ்செய்பவர்.

10. உன்னுமுள தைய மிலதுணர்வா யோவாது
மன்னுபவந் தீர்க்கு மருந்து.

உணர்வாய் - (சிவபிரான்) அறிவுக்கறிவாய்; ஓவாது - (ஆன்மாக்களை) விட்டு நீங்காமலிருந்து; மன்னுபவம் - (அவைகளைப் பந்தித்துள்ள) சநந மரணதுக்கத்தை; தீர்க்கும் - போக்கிச் சுகமருளுகின்ற; மருந்து - அமிர்தமாவார்; ஐயம் இலது - இதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை; உன்னும் - (ஆகையால்) அவரைத் தியானியுங்கள்; உளது - அவர் உங்கள் உள்ளத்தில் இருப்பார்.

சிவபிரான் பிறவிப்பிணிக்கு மருந்தாயிருப்பதால்
அவரைத் தியானித்து வழிபடுக.

2. பசுநிலை

1. *பிறந்தநாண் மேலும் பிறக்குநாள் போலுந்*
துறந்தோர் துறப்போர் தொகை.

துறந்தோர் (தொகை) - முத்தியடைந்தோரது தொகையும்; துறப்போர் தொகை - முத்தியடைய இருப்பாரது தொகையும்; பிறந்த நாள் (தொகை) - சிருட்டிமுதற்செல்லான நாட்களின் தொகையையும்; மேலும் பிறக்குநாள் (தொகை) -சங்காரம் வரை வருங்காலத்தின் தொகையையும்; போலும் - ஒத்திருக்கும்.

ஆன்மாக்கள் எண்ணிறந்தன.

2. *திரிமலத்தா ரொன்றதனிற் சென்றார்க ளன்றி*
யொருமலத்தா ராயு முளர்.

திரிமலத்தார் (ஆயும்) - மூன்று மலத்தினையுடையவர்களாயும்; அதனில் ஒன்று சென்றார்கள் (ஆயும்) - (அந்த எண்ணில்) ஒன்று குறைய இரண்டு மலத்தினையுடையவர்களாயும்; அன்றி - இவ்விரு வகையினரைத் தவிர; ஒரு மலத்தாராயும் - ஒரு மலத்தையுடையவர்களாயும்; உளர் - (ஆன்மாக்கள்) இருப்பர்; மும்மலத்தார் - சகலர்; இருமலத்தார் - பிரளயாகலர்; ஒரு மலத்தார் - விஞ்ஞானகலர்.

ஆன்மாக்கள் மூன்று வகையினராவர்.

3. *மூன்றுதிறத் துள்ளாரு மூலமலத் துள்ளார்க*
டோன்றலர்தொத் துள்ளார் துணை.

மூன்றுதிறத்து உள்ளாரும் - இந்த மூன்று வகையினரும்; மூலமலத்து உள்ளார்கள் - ஆணவமலத்துள் அகப்பட்டுள்ளவர்களே; துணை உள்ளார் - (மாயாமலத்) துணையையுடைய முதற் பிரிவினர்; தொத்து - (தமது) ஆணவமல பந்தத்தை; தோன்றலர் - அறிய மாட்டார்.

சகலர் ஆணவமலத்தையறியார்; பிரளயாகலர் விஞ்ஞானகலர் அறிவார்.

4. *கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடுந்*
திண்டிறலுக் கென்னோ செயல்.

நாளும் - ஒவ்வொரு நாளிலும்; கண்டவற்றை - (நனவிற்) கண்ட செய்திகளை; கனவில் - சொப்பனத்திலே; கலங்கியிடும் - மாறுபடக் காணுகின்ற; திண்திறலுக்கு - வலிய திறமையுள்ள (= அற்பவலியுள்ள) ஆன்மாக்களுக்கு; செயல் என்னோ - சுதந்திரச் செயல் எங்ஙனமிருத்தல் கூடும்?

ஆன்மாக்களுக்குச் சுதந்திரச் செயலில்லை.

5. *பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்*
கறிவென்ற பேர்நன் றற.

பொறி இன்றி - இந்திரியங்களின் உபகாரத்தாலல்லாமல்; ஒன்றும் - எந்த விடயத்தையும் ; புணராத - அறியமாட்டாத ; புந்திக்கு - ஆன்மாக்களுக்கு; அறிவு என்றபேர் - சுதந்திர அறிவு உடையன என்ற பெயர்; அற நன்று - மிகவும் அழகிது.

ஆன்மாக்களுக்குச் சுதந்திர அறிவு இல்லை.

6. *ஒளியு மிருளு முலகு மலர்கட்*
டெளிவி லெனிலென் செய.

அலர்கண் - விழித்திருக்குங் கண்ணில்; தெளிவு இல் எனில் - பார்க்குஞ் சத்தி இல்லையானால்; ஒளியும் - (சூரிய, சந்திர, அக்கினிப்) பிரகாசங்களும்; இருளும் - இருட்டும்; உலகும் - உலகமும்; என்செய - இருந்து என்னபயன்?

ஆன்மாக்களுக்குச் சுதந்திரவறிவில்லையாயினும்
பரதந்திரவறிவு உண்டு.

7. *சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை*
யுய்த்தல்சத சத்தா முயிர்.

சத்து - சிவபிரான் (ஞானசொரூபியாதலின்); அசத்தை - பாசத்தை; சாராது - சுட்டியறியமாட்டார்; அசத்து - பாசம் ; அறியா - (சடமாகையால்) ஒன்றையும் அறியமாட்டாது; அங்கண் - அங்ஙனமிருக்கும் நிலையில்; இவை - சிவபிரானையும் பாசத்தையும்; உய்த்தல் - அறிவது; சதசத்தாம் உயிர் - சதசத்தாகிய ஆன்மாக்களேயாகும்.

ஆன்மாக்களே சிவத்தையும் பாசத்தையும் அறிவார்கள்.

8. *இருளி லிருளாகி யெல்லிடத்தி லெல்லாம்*
பொருள்க ளிலவோ புவி.

இருளில் இருள் ஆகி - இருள்வந்த காலத்து இருள்மயமாகியும்; எல்இடத்தில் எல் ஆம் - ஒளிவந்தகாலத்தில் ஒளிமயமாகியுமிருக்கின்ற; பொருள்கள் - பதார்த்தங்கள்; புவி - இவ்வுலகத்தில்; இலவோ - இல்லையோ? அப்பதார்த்தங்கள் ஆகாசம், கண் முதலியன.

சதசத்துப்பொருட்கு உவமையாக ஆகாச
முதலிய பொருள்கள் உலகத்துள்ளன.

9. *ஊமன்கண் போல வொளியு மிகவிருளே*
வாமன்கண் காணா தவை.

ஊமன்கண் போல - (ஆதித்தனொளியையறியமாட்டாத) கூகையின் கண்ணைப் போல; வாமன்கண் - சிவவொளியை; காணாதவை - அறியமாட்டாத பெத்த ஆன்மாக்களுக்கு; ஒளியும் - அந்தச் சிவவொளியும்; மிகஇருளே - சிறிதுந்தோன்றாது.

பெத்த ஆன்மாக்கள் சிவத்தைக்காணமாட்டார்.

10. *அன்றளவு மாற்றுமுயி ரந்தோ வருடெரிவ*
தென்றளவொன் றில்லா விடர்.

அன்று அளவும் - அநாதியாகவே; அளவு ஒன்று இல்லா இடர் - அளவற்ற (சநநமரண) துக்கத்தை; ஆற்றும் உயிர் - சுமந்துவருகின்ற ஆன்மாக்கள்; அருள்தெரிவது - திருவருளைத் தெரிந்து இன்பமடைவது; என்று! - எந்தக்காலத்தில் ; அந்தோ! - ஐயோ! பரிதாபம்.

ஆன்மாக்கள் படுந்துன்பங்கண்டு ஆசாரியர் இரங்குகின்றார்கள்.

3. பாசநிலை

1. *துன்றும் பவத்துயரு மின்புந் துணைப்பொருளு*
மின்றென்ப தெவ்வாறு மில்.

துன்றும் - (ஆன்மாக்களைப்) பந்தித்துள்ள; பவத்துயரும் - பிறவித் துன்பமும்; இன்பும் - முத்தியின்பமும்; துணைப் பொருளும் - (முதல், துணை, நிமித்தமென்னுங்) காரணப் பொருள்களும்; இன்று என்பது - இல்லை என்பது; எவ்வாறும் இல் - (காண்டல் முதலிய) எந்த அளவைகளாலும் முடியாது.

உள் பொருள்கள் இவை யென்பது.

2. *இருளான தன்றி யிலதெவையு மேகப்*
பொருளாக நிற்கும் பொருள்.

எவையும் - எல்லாப் பொருள்களும்; ஏகப் பொருளாக - (தம் வித்தியாசங்கள் தோன்றாமல்) ஒரே பொருள் போலிருக்கும்படி; நிற்கும் பொருள் - அவைகளை மறைத்து நிற்கின்ற பொருள்; இருளானதன்றி இலது - இருளைத் தவிர வேறில்லை.

இருளொன்றே பொருள்களை மறைக்கும்.

3. ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டு
மிருபொருளுங் காட்டா தித.

இருள் - இருளானது; ஒரு பொருளுங் காட்டாது - எந்தப் பொருளையுங்காட்டாமல்; உருவம் காட்டும் - (இருள் இங்கேயிருக்கிறது என்னும்) உணர்வைக் காட்டி நிற்கும் ; (ஆனால்) இது - ஆணவமலமானது; இரு பொருளும் காட்டாது - சிவத்தையேயன்றித் தன்னையுங் காட்டாது.

ஆணவந்தன்னையுங் காட்டாதாகலின் இருளினுங் கொடியது.

4. அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி
யின்றளவு நின்ற திருள்.

ஆவியிடை - ஆன்மாவினிடத்திலே; இருள் - ஆணவமலம்; அடங்கி - பொருந்தி; அன்று அளவி - அதனை அநாதியாகவே பந்தித்து; உள் ஒளியோடு- பதிப் பொருளோடு; இன்று அளவும் - நாளிது வரையும்; நின்றது - (தானும் ஒரு பொருளாக) நிற்பதாகும்.

ஆன்மாவுக்கு மட்டும் ஆணவபந்தம் உண்டு; பதிக்கில்லை.

5. பலரைப் புணர்ந்துமிருட் பாவைக்குண் டென்றுங்
கணவர்க்குந் தோன்றாத கற்பு.

பலரைப் புணர்ந்தும் - எல்லாவுயிர்களையும் (பேதமறக்) கூடியிருந்தும்; கணவர்க்கும் - அவ்வான்மாக்களுக்குங் கூட; என்றும் - எந்தக் காலத்திலும்; தோன்றாத - வெளிப்படாத; கற்பு -தன்மை; இருட்பாவைக்கு - ஆணவமலமாகிய பெண்ணுக்கு; உண்டு - உளதாகும்.

ஆன்மாவோடு கூடியிருக்கும் ஆணவமலம்
அவ்வான்மாவுக்குத் தெரிதலில்லை.

6. பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாத
தன்மையிரு ளார்ந்த் தது.

பல்மொழிகள் என் - பலபல பேசி யாது பயன்? உணரும் பான்மை - (சத்தியத்தை) யறியுஞ் ஞானத்தை; தெரியாத தன்மை - அறிந்து கொள்ள மாட்டாத மடமை; இருளார் - ஆணவமலத்தால்; தந்தது - ஆன்மாக்களுக்குத் தரப்பட்டது.

ஆன்மாவுக்கு அஞ்ஞானம் ஆணவமலத்தால் வந்தது.

7. இருளின்றேற் றுன்பே னுயிரியல்பேற் போக்கும்
பொருளுண்டே லொன்றாகப் போம்.

இருள் இன்றேல் - ஆணவபந்த மில்லையானால்; துன்பு ஏன் - ஆன்மாக்களுக்குத் துன்பமேது? (இல்லை); உயிர் இயல்பேல் - (அத்துன்பம்) அவைகளுக்கு இயல்பு என்றால்; (ஒன்றாகப் போம்) - (முத்தியிலும் அவைகளோடு) ஒன்றாகப் புகுந்து அவைகளை வருத்தும் ; போக்கும் பொருள் உண்டேல் - (அத்துன்பத்தை) யழிப்பதற்கு (ச்சிவஞானமென்னும்) பொருள் உண்டு என்றால் ; ஒன்றாகப் போம் - (நீ கூறுங்குணமாகிய துன்பத்தோடு அதனை யியல்பாகவுடைய குணியாகிய ஆன்மாக்களும்) அழிந்து இல்லை யாய்விடும்; குணமழியிற் குணியுமழிதல் உறுதி.

ஆன்மாக்களுக்குத் துன்பம் இயல்பன்று, ஆணவத்தால் வந்தது.

8. ஆசாதி யேலவணைவ காரணமென் முத்திநிலை
பேசா தகவும் பிணி.

ஆசு ஆதியேல் - ஆணவம் (ஆன்மாக்களை) இடைக்காலத்திற் பொருந்தியதென்றால் ; அணைவ காரணம் என் - அப்படிப்பொருந்தியதற்குக் காரணமென்ன? (அன்றியும்)

முத்தி நிலை - முத்தியை யடைந்தகாலத்திலும் ; பேசாது - பேசாமல் ; பிணி - ஆணவமலம், அகவும் - (ஆன்மாக்களை) வந்து பந்தித்துக் கொள்ளும்.

ஆன்மாவுக்கு ஆணவபந்தம் அநாதி.

9. ஒன்று மிகினு மொளிகவரா தேலுள்ள
மென்று மகலா திருள்.

ஒன்று மிகினும் - மாயை சேர்ந்தகாலத்தும் ; உள்ளம் - ஆன்மா ; ஒளி கவராதேல் - அறிவு விளக்கம் பெறாவிட்டால் ; இருள் - அந்த ஆணவம் ; என்றும் அகலாது - ஆன்மாவை விட்டு எந்தக் காலத்திலும் நீங்குதல் இல்லை.

ஆணவபந்தம் அநாதியாயினும் ஆன்மாவை விட்டு நீங்குந்தன்மையையுடையது.

10. விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து.

கன்மத்து - புண்ணிய பாவங்கட்கிடாக ; மாயை - மாயாமலமானது ; வடிவாதி - தனு கரணபுவன போகங்களாக ; வந்து - (காரியப்பட்டு

ஆன்மாக்களைப்) பொருந்தி ; விடிவாம் அளவும் - சிவஞானம் பிரகாசிக்கும் வரை ; விளக்கு அனைய - (அவைகளுக்குப் பிரபஞ்சபோகங்களைக் காட்டும்) விளக்குப் போலிருக்கும்.

முத்திவரை மாயை ஆன்மாக்களுக்கு
விளக்குப் போலுதவும்.

4. அருளது நிலை

1. அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்
பொருளிற் றலையிலது போல்.

அகிலத்து - உலகத்தில் ; வேண்டும் - (ஒருவர்) விரும்பிய ; பொருளின் - பொருளைக்காட்டிலும் ; தலை இலதுபோல - மேலான வேறு பொருள் அவருக்கு இல்லாததுபோல் ; அருளின் பெரியது - திருவருளைக்காட்டிலும் பெரியபொருள் ; (இலது) - யாவருக்கு மில்லை.

திருவருளைவிடப் பெரிய பொருளில்லை.

2. பெருக்க நுகர்வினைப் பேரொளியா யெங்கு
மருக்கனென நிற்கு மருள்.

அருக்கன் என - (பொருளையீட்டவும் அனுபவிக்கவும் மக்களுக்கு உபகாரமாய் நிற்குஞ்) சூரியன்போல ; நுகர்வினை - (ஆன்மாக்களுக்குப் புண்ணிய பாவங்களையீட்டி அவைகளின் பயனாகிய) சுகதுக்கங்களை ; பெருக்க - அனுபவமாக்கும் பொருட்டு; அருள் - திருவருளானது ; பேர் ஒளியாய் - மிகுந்த பிரகாசமாய் ; எங்கும் - எவ்விடத்தும் ; நிற்கும் - (நிறைந்து) நிற்கும்.

ஆன்மாக்கள் வினைகளைச் சம்பாதித்தற்கும்
அநுபவித்தற்கும் திருவருள் உடனாய் நிற்கும்.

3. ஊனறியா தொன்று முயிரறியா தொன்றுமிவை
தானறியா தாரறிவார் தான்.

ஊன் - (தத்துவக்கூட்டமாகிய) உடம்பு ; ஒன்றும் அறியாது - (சடமாகலின்) எதனையுமறியாது ; உயிர் - ஆன்மா ; ஒன்றும் அறியாது - (அறிவிக்க அறியுமன்றித்) தானாக ஒன்றையுமறிய மாட்டாது ; (ஆகலின்) இவை தான் அறியாது - இவ்விரண்டன் தன்மைகளையும் திருவருள் தானுமறிந்து (அறிவியா) விட்டால் ; ஆர் தான் அறிவார் - எந்தவுயிர் தானறியக்கூடும்?

திருவருளறிவிக்க ஆன்மாவறியுமியல்புடையது.

4. *பாலாழி மீனாழும் பான்மைத் தருளுயிர்கள்*
மாலாழி யாழு மறித்து.

அருள் உயிர்கள் - திருவருள் வியாபகத்திற் பொருந்திய வுயிர்கள் (அதனை நுகராது) ; மால் ஆழி - (மாயா போகமாகிய) மயக்கக்கடலுள் ; மறித்து - மீள மீள ; ஆழும் - அழுந்துவனவாம் ; (இத்தன்மை) பால் ஆழி மீன் - திருப்பாற் கடலிலுள்ள மீன்கள் ; ஆழும் பான்மைத்து - (பாலை விட்டு வேறுபலவற்றைத்) தின்னுந்தன்மை போலாம்.

உயிர் அருளோடு கூடியிருந்தும் மாயாபோகத்
தையே யனுபவித்து வருகிறது.

5. *அணுகு துணையறியா வாற்றோனி லைந்து*
முணர்வை யுணரா வுயிர்.

அணுகு துணை - (வழிச்செல்லுங் காலத்தில்) உடன் வருகிற துணைப் பொருள்களை ; அறியா - (துணைப் பொருள்களென்று கூட வுணராமல் ; ஆற்றோனில் - (தான் நினைத்த காரியத்திலேயே கண்ணாகச் செல்லும்) வழிப்போக்கனைப் போலவும் ; உயிர் - ஆன்மா ; ஐந்தும் உணர்வை - தனது ஐந்தவத்தையினும் (தனக்குத் துணையாயுந் தலைமையாயுமுள்ள) திருவருளை உணரா - (அங்ஙனமாயதென்று) அறியமாட்டாது.

உயிர் தனக்கறிவிக்குந் திருவருளையறியமாட்டாது.

6. *தரையை யறியாது தாமே திரிவார்*
புரைய வுணரா புவி.

தரையை - பூமியை ; அறியாது - (தமது போக்குவரவுகளுக்கு ஆதாரமென்று) கருதாமல் ; தாமே - தாமே (தமக்காதாரமென்று கருதி); திரிவார் புரைய - போக்குவரவு செல்கின்றவர்களைப் போல; புவி - ஆன்மாக்கள் ; உணரா - (திருவருளைத் தமக்காதாரமென்று) கருதா.

திருவருளே தமக்குத் தாரகமென்பதை ஆன்
மாக்கள் அறியமாட்டா.

7. *மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர்*
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம். (ஞானந்

மலை கெடுத்தோர் - மலை வெளிப்பட்டுக் கண்முன் தோன்றவும் அதனைக்காணாது வருந்துவோரும் ; மண் கெடுத்தோர் - உலகம் தனக்கு ஆதாரமாயிருக்கவும் அதனைக்காணாது வருந்துவோரும்;

வான் கெடுத்தோர் - ஆகாயம் தான் போக்கு வரவு செய்ய இடங் கொடுப்பவும் அதனையறியாது வருந்துவோரும்; தலைஞானங் கெடுத்தோர் - (தனக்கு உபகரித்துவரும்) மேலான திருவருளை அறியாது வருந்துவோரும்; தற்கேடர்தாம் - (ஆகிய இவர்களெல்லாம் தமக்குத் துணைப் பொருளறியாதவர்களாதலின்) தம்மைத் தாமே கெடுப்பவர்களாவார்கள்.

திருவருளை மறத்தல் கேட்டிற்கே காரணம்.

8. வெள்ளத்து ணாவற்றி யெங்கும் விடிந்திருளாங்
கள்ளத் திறைவர் கடன்.

வெள்ளத்துள் - (உதட்டளவு செல்லுகின்ற நல்ல) தண்ணீரினுள் (நின்றும்) ; நா வற்றி - (அதனைப் பருகாமல்) நாக்கு வறண்டும் ; எங்கும் விடிந்து - நாற்றிசைகளிலும் சூரியவொளி வீசிநிற்ப ; இருளாம் - (அதனைப் பயன்படுத்தாமல்) கண்ணை மூடியும் (நிற்கின்ற மூடனது தன்மையைப் போலவே) ; கள்ளத்து இறைவர் - வஞ்சமாகத் தலைமையெய்தியவுயிர்கள்; கடன் - (திருவருளிலிருந்தும், அதனால் வருமின்பத்தையிழந்து நிற்கின்ற) தன்மையுமாகும்.

உயிர்கள் திருவருளின்பத்தை யனுபவியாத
பேதைமையினும் இழிவான பேதைமை
வேறொன்றில்லை.

9. பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன்மேற் பூஞை
கரப்பருந்த நாடுங் கடன்.

பரப்பு - (மனம்) பலவிடங்களிலுஞ் செல்லுதல் ; அமைந்து - ஒழிந்து ; கேண்மின் - (நான் சொல்லுவதைக்) கேளுங்கள் ; இது - திருவருளை மறந்து பிரபஞ்சவிடயங்களிற் பற்றுதலாகிய தன்மை; பாற்கலன் மேல் பூஞை - பால் நிறைந்த குடத்தின் மேலிருக்கும் பூனை; கரப்பு அருந்த - (பாலைக் குடியாமல் சுவரிலிருக்கும்) கரப்பு என்னும் சிறுபூச்சியைத்தின்னுவதற்கு; நாடுங் கடன் - விரும்பிப்பாயுந் தன்மையைப் போலாம்.

உயிர் அருளைவிட்டு உலகத்தைப்பற்றினால்
இரண்டும் பயன்படா.

10. இற்றை வரையிசைந்து மேதும் பழக்கமிலா
வெற்றுயிர்க்கு வீடு மிகை.

இற்றைவரை - (அநாதி தொட்டு) நாளிதுவரை; இசைந்தும் - திருவருளோடு கலந்திருக்கும்; ஏதும் - சிறிதாயினும்; பழக்கம் இலா

- அக்கலப்பின் பயனையடைய மாட்டாத ; வெற்றுயிர்க்கு - பயனற்ற ஆன்மாக்களுக்கு; வீடு - முத்தியடைதல்; மிகை - தகாது.

அருளோடு பழகாத ஆன்மாக்களுக்கு
முத்தியின்பமும் வேண்டுமா?

5. அருள் உருநிலை.

1. *அறியாமை யுண்ணின் றளித்ததே காணுங்*
குறியாகி நீங்காத கோ.

அறியாமை - (எவரும்) அறியாமல்; உள் நின்று - (உயிர்க்குயிராய்) ஒளித்து நின்று; அளித்த தே - (ஆன்மாக்களைக்) காத்த திருவருளே; காணும் - (நாம் கண்ணினாலும்) காணும்; குறியாகி - வடிவு கொண்டு; நீங்காத கோ -(நம்மை விட்டு) வேறாய் நில்லாத குருமூர்த்தி.

திருவருளே ஆசாரிய மூர்த்தியாய் வெளிப்படும்.

2. *அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்*
சகத்தவருங் காண்பாரோ தான்.

அகத்து உறு நோய்க்கு - வீட்டில் ஒருவரைப் பொருந்திய பிணியை; உள்ளினர் அன்றி - அவ்வீட்டினராகிய உறவினரேயறிந்து நீக்குவதைத்தவிர; அதனை - அந்தப் பிணியை; சகத்தவரும் - உலகத்து அயலாரும்; காண்பாரோ - அறிந்து நீக்கு வாரோ?(மாட்டார்)

உயிர்க்குள்ளிருக்கும் அருளே ஆசாரியனாய் வந்து அதன் மலநோயை நீக்குதல் வேண்டும்.

3. *அருளா வகையா லருள்புரிய வந்த*
பொருளா ரறிவார் புவி.

அருளாவகையால் - ஆன்மாக்களுக்குத் தெரியும்படி சிருட்டி முதலிய நான்கையுஞ் செய்யாததுபோல; அருள்புரியவந்த - மானுடவடிவில் மறைந்து பக்குவர்களுக்கு அநுக்கிரகத்தைச்செய்யும் பொருட்டு வெளிப்பட்டு வந்த; பொருளை - திருவருளை; புவி - உலகத்தில்; ஆர் தளறிவார் - குருமூர்த்தியென்று யார் தான் அறிந்துகொள்ளுவார்? (ஒருவருமாட்டார்).

அருள் ஆசாரியனாகவந் தநுக்கிரகித்தல் இரகசியமான செய்தி.

4. *பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமா*
மெய்யிரண்டுங் காணார் மிக.

பொய் - நிலையாத வுலகவாழ்வையும்; இருண்ட சிந்தை - ஆண வத்தால் மறைந்தவுணர்வையும்; பொறி இலார் - (உடையராய்) ஞானமென்னுஞ் செல்வத்தினை யிழந்து நிற்பவர்; போதமாம் - ஞானமயமான; மெய் இரண்டும் - உண்மைப் பொருள்களாகிய திருவருள், அதனாலாகிய தேசிகவடிவம் என்னுமிரண்டையும்; மிக காணார் - சிறிதுங் கண்டுகொள்ளமாட்டார்.

அஞ்ஞானிகளுக்கு அருளையும் ஆசாரியனையுங்
கண்டுகொள்ளும் ஆற்றல் இல்லை.

5. *பார்வையென மாக்களைப் பற்றிப் பிடித்தற்காம்*
போர்வையெனக் காணா புவி.

மாக்களை - விலங்கு பறவை முதலியவைகளை; பற்றி - ஆசை கொண்டு; பிடித்தற்கு - பிடிப்பதற்கு; ஆம் - வேடர்களாலு பயோகிக்கப்படுகிற; பார்வை என - (அவைகளின் வடிவங்களை யொத்த) தீவகங்கள் போல; போர்வை என - (தேசிகவடிவமாகிய மானுடச் சட்டையானது மனிதர்களை வசப்படுத்தி யநுக்கிரகிக் கத்திருவருள் போர்த்துக்கொண்ட) போர்வையே யென்று; புவி - உலகத்தார்; காணா - அறிந்து கொள்ளமாட்டார்.

ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிப்பதற்கே அருள்
ஆசாரிய வடிவந் தாங்கும்.

6. *எமக்கெ னெவனுக் கெவைதெரியு மவ்வத்*
தமக்கவனை வேண்டத் தவிர்.

எவனுக்கு - எந்த மனிதனுக்குத் தான்; எவைதெரியும் - குருவின் துணையின்றி எந்த ஞான நூலில் எந்த வுண்மைவிளங்கும்? (ஒன்றும் விளங்காது). (ஏனெனில்)

அவ்வத் தமக்கு - அந்த ஞான நூற்களே தம் உட்பொருளை விளக்கித் காட்டுதற்கு; அவனை- குருவை; வேண்ட- விரும்பி நிற்றலால் (என்க). (ஆகையால்)

எமக்கு என் - ஆசாரியனுடைய உபகாரம் எமக்கு யாது பயன் கருதி என்று நீ வினாவுவதை; தவிர் - விட்டுவிடுவாயாக.

ஆசாரியனாலேயே ஞான சாத்திரங்களின்
உண்மை விளங்குவதாகும்.

7. விடநகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளுங்
கடனிலிருள் போவதிவன் கண்.

விடம் - மனிதனது இரத்தத்திற் கலந்திருக்கும் பாம்புவிட மானது; நகுலன் மேவினும் - கிரியேவந்து தொட்டாலும் (தீராமல்); மெய்ப்பாவகனின் - அதில் அதிட்டித்துள்ள ஆதிதைவிக வடிவைப்பாவிக்கும் மந்திரவாதியின் (பார்வை தொடுதல் முதலியவற்றால் மட்டும்); மீளும் - தீரும்; கடனில் - முறை போல; இவன்கண் - ஆசாரியானது திருநோக்கு முதலியவைகளால் மட்டுமே; இருள்போவது - ஆணவமலம் நீங்குவதாகும்.

ஆசாரியன் செய்யுந்தீக்ஷையாலேயே ஆணவ
மலம் நீங்குதலுண்டு.

8. அகலத் தருமருளை யாக்கும் வினைநீக்குஞ்
சகலர்க்கு வந்தருளுந் தான்.

வினை நீக்கும் சகலர்க்கு - வினையை நீக்கிக்கொள்ளுதற்கேற்ற பக்குவம் வந்த சகலவர்க்கத்தினருக்கு; வந்து அருளும் - குருவடி வாகிய ஆதாரத்திலதிட்டித்து வந்து அநுக்கிரகிக்கும்; தான் - திருவருளானது; அகலத்தரும் - கலைநீங்கிய விஞ்ஞானகலர் பிரளயாகலர்களுக்கும்; அருளை - அநுகிரகத்தை; ஆக்கும் - நிராதாரமாய் நின்றுசெய்யும்.

அருள் சகலர்க்கு ஆசாரியனை யதிட்டித்தும்
பிரளயாகலர் விஞ்ஞானகலர்க்கு நிராதாரமாயும்
அநுக்கிரகஞ்செய்யும்.

9. ஆரறிவா ரெல்லா மகன்ற நெறியருளும்
பேரறிவான் வாராத பின்.

எல்லாம் அகன்ற - ஆறு அத்துவாக்களின் எல்லையும் நீங்கின; நெறி - முத்திநெறியை; அருளும் - அநுக்கிரக்கவல்ல; பேர் அறிவான் - முற்றறிவுடைய சிவபிரானே; வாராத பின் - குருமூர்த்தியா யெளுந்தருளாவிட்டால்; ஆர் அறிவார் - அம் முத்திநெறியை யார்தான் அறியமாட்டுவார்?

(ஒருவரும் மாட்டார்)

ஆசாரியன் அநுக்கிரகித்தாலன்றி
ஆன்மாக்களுக்கு முத்திப்பேறில்லை.

10. *ஞான மிவனொழிய நண்ணியிடு நற்கலனற்*
பாநு வொழியப் படின்.

பாநுஒழிய - சூரியனுடைய சந்நிதானத்தாலன்றி; நல் கல் - அழுக்கற்ற சூரிய காந்தக்கல்லானது; அனல் படின் - அக்கினியைக் கக்குவதுண்டாயின்; இவன் ஒழிய - சற்குரு சந்நிதானத் தாலன்றி; ஞானம் நண்ணியிடும் - ஆன்மாவுக்குச் சிவஞானம் பொருந்துதலுண்டு.

குருவின் உபதேசத்தாலன்றி ஆன்மாக்களுக்கு
ஞானம் உதித்தலில்லை.

6. அறியுநெறி

1. *நீடு மிருவினைக ணேராக நேராதல்*
கூடுமிறை சத்தி கொளல்.

நீடும் - வளர்கின்ற; இருவினைகள் - புண்ணிய பாவங்கள்; நேர் ஆக - சமமான காலம் வர; சத்திகொளல் - சக்தி நிபாதமும்; இறை - சிவபிரான்; நேர் ஆதல் - குருமூர்த்தியாக வெளிப்பட்டு நிற்றலும்; கூடும் - உண்டு.

இருவினை யொப்பு என்பது ஆன்மாவின் அறிவிலே நிகழ்வது.

ஆன்மாவுக்கு இருவினை யொப்பு வந்த காலத்தில்
சத்திநிபாதமும் ஆசாரியன் வெளிப்படலும் ஏற்படும்.

2. *ஏக னனேக னிருள் கரும மாயையிரண்*
டாகவிவை யாறாதி யில்.

ஏகன் - பதியும்; அனேகன் - பசுவும்; இருள் - ஆணவமலமும், கருமம் - கருமமலமும்; இரண்டு மாயை - சுத்தம், அசுத்தம் என்னும் இரண்டு மாயா மலங்களும்; ஆக இவை ஆறு - ஆகிய இந்த ஆறு பொருள்களும்; ஆதி இல் - அநாதி நித்தியங்களாம்.

அழிவில்லாத அநாதிப் பொருள்கள்
ஆறு என்று உபதேசிக்கப் பெறுவாய்.

3. *செய்வானுஞ் செய்வினையுஞ் சேர்பயனுஞ் சேர்ப்பவனு*
முய்வா னுளவென் றுணர்.

செய்வானும் - நல்வினை தீவினைகளைச் செய்யும் ஆன்மாவும்; செய்வினையும் - செய்யப்படும் நல்வினை தீவினைகளும்; சேர்பயனும் - (அவைகளாற்) பொருந்துகின்ற பயனாகிய சுக துக்கங்களும்; சேர்ப்பவனும் - (அச் சுகதுக்கங்களை யான்மாவுக்கு ஊட்டுகின்ற)

சிவபிரானும் (ஆகிய இந்நான்கும்); உள என்று - உள் பொருள்களென்று; உய்வான் - (நீ) நற் கதியடைப்யும் பொருட்டு; உணர் - அறிந்து கொள்வாயாக.

"செய்வினையுஞ் செய்வானு மதன்பயனுஞ் சேர்ப்பானு
மெய்வகையா னான்காகும் விதித்த பொருள்" - பெரியபுராணம்

அநாதிப் பொருள்களின் சம்பந்தத்தை யிங்ஙனம்
உணர்வாயாக.

4. *ஊனுயிரால் வாழு மொருமைத்தே யூனொடுயிர்*
தானுணர்வோ டொன்றாந் தரம்.

ஊனொடு உயிர்தான் - உடம்பிற் பொருந்திய உயிரானது; உணர்வோடு - திருவருளோடு; ஒன்றாம் தரம் - பொருந்தியறியுந்தன்மை; ஊன் - உடம்பானது; உயிரால் - தன்னைச் செலுத்தும் உயிரால்; வாழும் - அறிந்து வாழும்; ஒருமைத்து - ஒற்றுமைத் தன்மையைப் போல்வது.

அருள் அந்தச் சம்பந்தத்தை உனக்கு
உணர்விப்பது இந்த விதமாகவே.

5. *தன்னிறமும் பன்னிறமுந் தானாங்கற் றன்மைதரும்*
பொன்னிறம்போல் மன்னிறமிப் பூ.

தன் நிறமும் - தனது இயல்பான நிறத்தைக் காட்டுதலும்; பல் நிறமும் - தன்னைச் சார்ந்த பொருள்களின் பல வகைப்பட்ட நிறங்களைக் காட்டுதல் (ஆகிய இரண்டு தன்மைகளையும்); தான் ஆம் கல் - தன்னிடத்லே பொருந்திய பளிங்கினது; தன்மை - அத்தன்மைகளை; தரும் - விளக்குகின்ற; பொன் நிறம்போல் - சூரியனுடைய ஒளியைப் போல; இப் பூ - இந்த உலகத்தில் (ஆன்மாவுக்குத் தன்னியல்பையும் சார்ந்ததன் வண்ணமாம் இயல்பையும் விளக்குவது); மன் நிறம் - கர்த்தாவினுடைய திருவருள்.

அருள் உன்னைக் காரியப்படுத்துவது இப்படியே.

6. *கண்டொல்லை காணுநெறி கண்ணுயிர் நாப்பணொளி*
யுண்டில்லை யல்லா தொளி.

கண் - கண்ணானது; கண்டு - (ஒரு பொருளைப்) பார்த்து; ஒல்லை - (அதனை) விரைவில்; காணும் நெறி - இன்னதென உணர்ந்து கொள்ளுதல்; உயிர் - உயிரின் உபகாரத்தால்

(அது போல்)

(உயிர்) நாப் பண் - அவ்வுயிரினிடத்தில்; ஒளி உண்டு - திருவருளாகிய ஒளிகலந்திருத்தலுண்டு; ஒளி அல்லாது - இவ்வொளி உபகரித்தாலல்லாமல் ; இல்லை - (ஆன்மா சிவத்தைக்காணுதல்) ஒருக்காலுமில்லை.

அருள் காட்டினாலன்றி நீ சிவத்தைத் தரிசித்தல் முடியாது.

7. புன்செயலி னோடும் புலன்செயல்போ னின்செயலை
மன்செயல தாக மதி.

புன் செயலின் - பிரபஞ்ச காரியங்களிலே; ஓடும் (நீ செலுத்தச்) செல்லுகின்ற; புலன் செயல்போல் - இந்திரியங்களின் சேட்டைகளை உன் சேட்டைகளாகக் கருதுவதுபோல; நின் செயலை - (திருவருள் செய்விக்க) நீ செய்யுஞ் செயல்களை; மன் செயலது ஆக- திருவருளின் செயல்களாகவே; மதி - நீ கருதுவாயாக.

நீ உன் செயலையெல்லாம் அருளின் செயலாகக் கொள்.

8. ஒராதே யொன்றையுமுற் றுன்னாதே நீமுந்தித்
பாராதே பார்த்ததனைப் பார்.

பார்த்ததனை - உன்னைக்கண்ட ஞானத்தை; ஓராதே - எப்படியிருக்குமோ வென்றாராயாமலும்; ஒன்றையும் - அதனது எந்தப் பகுதியையும்; உற்று உன்னாதே - பிரபஞ்சப் பொருள்களைப் போற் குறிப்பிட்டு நினையாமலும்; நீ முந்திப் பாராதே - நீயாக முனைத்துநின்று பாராமலும்; பார்- அசைவின்றி நின்று காண்பாயாக,

அருளை யகண்டாகரமாகத் தரிசிப்பாயாக.

9. களியே மிகுபுலனா கக்கருதி ஞான
வொளியே யொளியா யொளி

களியே - அப்படிக் காண்டலால்வரும் மகிழ்ச்சியை; மிகு புலன் ஆகக் கருதி - நீ விரும்பும் மேலான விடயமெனக் கொண்டு; ஞான ஒளியே - ஞானமாகிய பிரகாசமே; ஒளியாய் - உனக்கு வேண்டிய பிரகாசமென்று ; ஒளி - அதிற்புகுந்து அடங்குவாயாக.

சிவஞானப் பிரகாசத்துள் உனது ஆன்ம ஞானப்பிரகாசம் அடங்குக.

10. கண்டபடி யேகண்டு காணாமை காணாமை
கொண்டபடி யேகொண் டிரு.

கண்டபடியே - ஞானம் எப்படி வெளிப்பட்டதோ அப்படியே; கண்டு - நீ அதனைத் தரிசித்து ; காணாமை - அறியாமை ; காணாமை -

உன்னைப் பொருந்தாமல் ; கொண்டபடியே - அந்த ஞானம் எப்படி உன்னைக் கவர்ந்து கொண்டதோ அப்படியே ; கொண்டு இரு - நீயும் அதன் வசப்பட்டுக் கொண்டிருப்பாயாக.

நீ அருளின் வசமாய் நில்.

7. உயிர் விளக்கம்.

1. தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமீதுபோற்
றானதுவாய் நிற்குந் தரம்.

தூ நிழல் - (வெயிலிற்காய்வோன்) பரிசுத்தமாகிய நிழலை ; ஆர்தற்கு - (வெப்பம் நீங்கும்படி) போய்ப்பொருந்துதற்கு ; ஆரும் சொல்லார் - எவரும் அவனுக்குச் சொல்லவேண்டியதில்லை ; இது போல் - இந்த வுண்மையைப்போல ; தான் - (பிரபஞ்ச ஆசையாகிய வெப்பத்தாற்காய்ந்த) உயிர் ; அதுவாய் - திருவருள் வசமாய் (அதன் நிழலில்) ; நிற்கும் தரம் - (அவ்வெப்பம் நீங்கும்படி) போய்ப்பொருந்தி நிற்குந்தன்மையும்; தொகும் - அமையும்.

உலகத்தை வெறுத்தலே ஒருவனை அருளோடு சேர்க்கும்.

2. தித்திக்கும் பாறானுங் கைக்குந் திருந்திடுநாப்
பித்தத்திற் றான்றவிர்ந்த பின்.

திருந்திடும் நா - குற்றமற்ற நாக்குக்கு ; பித்தத்தின் - பித்த நோய் மேலிட்ட காலத்தில் ; பால்தானும் - பாலுங்கூட; கைக்கும் - கசக்கும்; தவிர்ந்த பின் - (ஆனால் அப்பித்த நோய்) நீங்கின காலத்தில் ; தித்திக்கும் - (அந்தப்பால்) இனித்திருக்கும்.

சிவசத்தியானது பிரபஞ்ச ஆசை யுடையார்க்கு மருளாகவும், பிரபஞ்ச வெறுப்புடையார்க்கு அருளாகவும் மாறும்.

3. காண்பா னொளியிருளிற் காட்டிடவுந் தான்கண்ட
வீண்பாவ மெந்நாள் விழும்.

இருளில் - ஆன்மாக்கள் ஆணவத்தில் மருண்டு கிடக்குங் காலத்தில் ; காண்பான் - தரிசித்தற்பொருட்டு ; ஒளி - சிவஞானமானது ; காட்டிடவும் - தானே தன்னை வெளிப்படுத்தவும் ; தான் கண்ட - அவைகள் அதனை மறந்து தாமே கண்டனவாகத்தருக்கும் ; வீண் பாவம் - வீணான பாவமானது ; எந்நாள் - (அவைகளுக்கு) எந்தக்காலத்தில் ; விழும் - தொலையும்?

சிவம் தானே தன்னைக் காட்டியது என்பதை
ஆன்மாக்கள் மறந்து தாமே அதனைத்
தரிசித்தனவாகத் தருக்குதல் பெரும்பாவம்.

4. *ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை*
தெளிவு தெளியார் செயல்.

ஒளியும் - (பிரபஞ்சப்பொருள்கள் அறியப்படாமல் சிவம் மட்டும் அறியப்படும்) ஞான நிலையிலும்; இருளும் - (சிவம் அறியப்படாமல் பிரபஞ்சம் மட்டும் அறியப்படும்) பெத்த நிலையிலும் ; பன்மை - பல பொருளின் தன்மை ; தெளிவு - தெளிநிலை ; தெளியார் செயல் - அறியப்பெறாத ஆன்மாக்களின் செயல் ; ஒருமைத்து - (ஒன்றை அறிந்து பிறிதொன்றை அறியாத அளவில்) ஒரே தகுதியையுடையது.

அருளோடு கூடி நிற்பார்க்குப் பிரபஞ்சந் தோன்றாது.
ஆணவத்தோடு கூடி நிற்பார்க்குச் சிவந்தோன்றாது.

5. *கிடைக்கத் தகுமோநற் கேண்மையார்க் கல்லா*
லெடுத்துச் சுமப்பானை யின்று.

நல் கேண்மையார்க்கு - திருவருளிடத்துக் களங்கமற்ற நல்ல அன்புடையார்க்கு ; அல்லால் - அல்லாமல் (பிறர்க்கு) ; எடுத்துச் சுமப்பானை - வினைகளை யேன்று கொள்ளுகிற சிவனை ; இன்று - நினைத்தபொழுதே ; கிடைக்கத் தகுமோ - எளிதிற்பெற முடியுமோ? (முடியாது) ; எடுத்துச் சுமப்பானென்ற கருத்தைச் சிவோகம் பாவனையாற் கண்ணபிரானும் 'வஹாம் யஹம்' என்று கூறினன்.

சிவம் மெய்யன்புடையார் செய்யும் வினைகளைத் தான் ஏன்று கொள்ளும்.

6. *வஞ்ச முடனொருவன் வைத்த நிதிகவரத்*
துஞ்சினனோ போயினனோ சொல்.

ஒருவன் வைத்த நிதி - ஒருவன் தேடி வைத்திருக்குஞ் செல்வத்தை ; வஞ்சமுடன் கவர - பிறனொருவன் களவால் எடுத்துக் கொண்டு போக வேண்டுமேயானால் ; துஞ்சினனோ - அச் செல்வத்துக்குரியவன் தூங்கிக் கிடந்தானா? (அல்லது) போயினனோ - அதனை விட்டுப் பிரிந்து வேறெங்கேனும் போய்விட்டானா? சொல் - சொல்வாயாக.

அருளை வஞ்சித்து இறைவனையடைதல் முடியாது.

7. *தனக்குநிழ லின்றா மொளிகவருந் தம்ப*
மெனக்கவர நில்லா திருள்.

தனக்கு - தனக்கென்று ; நிழல் இன்று - வேறொரு ஒளி இல்லாமல் ; ஆம் ஒளி கவரும் - சூரியனுடையதாகிய ஒளியாற் கவர்ந்து கொள்ளப்பட்ட ; தம்பம் என - பளிங்குத் தூண்போல ; கவர -

சிவஞானம் ஆன்ம போதத்தைக் கவர்ந்துகொள்ளுமாயின்; இருள் நில்லாது - அப்பொழுது ஆன்மாவின் மாட்டு ஆணவ மலந் தங்காது.

அருள் வசப்பட்ட ஆன்மாவினிடத்தில் ஆணவந் தங்காது.

8. உற்கைதரும் பொற்கை யுடையவர்போ லுண்மைப்பின்
நிற்க வருளார் நிலை.

உற்கை தரும் - தழற் கொள்ளியைப் பிடித்திருக்கும் ; பொன்கை - அழகிய கையை ; உடையவர் போல் - உடையவர்கள் (தாம் விரும்பிய பொருளைப் பார்க்குங்கால் தீபம் முன்னாகவும் தாம் பின்னாகவும் நின்று பார்த்தல்) போல ; உண்மைப்பின் - (சிவத்தைப் பார்க்குங்கால் ஆன்மாக்கள்) திருவருளை முன்னிறுத்தித் தாம் பின்னாக; நிற்க - நின்று பார்க்க ; அருள் ஆர் நிலை - (இதுவே ஆன்மாக்கள்) அருளோடு பொருந்தி நிற்கும் நிலையாகும்.

அருளை முன்னிட்டு நீ பின்னின்று காண்டலே
நீ அருளோடு பொருந்தி நிற்கும் நிலையாம்.

9. ஐம்புலனாற் றான்கண் டகன்றா லதுவொழிய
வைம்புலனார் தாமா ரதற்கு.

தான் - ஆன்மா ; ஐம்புலனால் - பஞ்சேந்திரியங்கள் வாயிலால் ; கண்டு - (சிவத்தைத்) தரிசிக்க முயன்றவிடத்து ; அகன்றால் - அது அவைகளைக் கடந்து நிற்பதாயின் ; அதற்கு - அதனைக் காட்டுதற்கு; அது ஒழிய - திருவருளையன்றி ; ஐம்புலன் ஆர் - பஞ்சேந்திரியங்கள் என்ன தகுதியையுடையன? தாம் ஆர் - அவைகளின் வசத்தனவாகிய ஆன்மாக்கள் தாம் அதனைக் காணுதற்கு என்ன தகுதியையுடையன?

சிவம் பஞ்சேந்திரியங்களுக்கும் ஆன்ம
ஞானத்திற்கும் எட்டாதது.

10. தாமே தருமவரைத் தம் வலியி னாற்கருத
லாமே யிவனா ரதற்கு.

தாமே தருமவரை - கிருபை மேலீட்டால் வலிந்து சென்று உபரிக்கின்ற ஒருவரை ; தம் வலியினால் - (உபகாரத்தைப் பெறுகின்றவர்) தமது திறமையினால் ; கருதல் - பெற்றதாக நினைத்தல் ; ஆமே - தகுமோ? (தகாது, ஆதலால்) ; அதற்கு - அருள் உபகரித்தலால் வருமின்பத்தைத் தன் திறமையினாற் பெற்றதாக நினைத்தற்கு ; இவன் ஆர் - ஆன்மா என்ன தகுதியையுடையது?

ஆன்மாவுக்கு இன்பத்தை யருளே கொடுக்கும்.

8. இன்புறு நிலை.

1. இன்புறுவார் துன்பா ரிருளி னெழுஞ்சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின்.

துன்பு ஆர் - பெருங்கேடுபொருந்திய ; இருளின் - பாசஞான பசுஞானங்களினின்றும் நீங்கி ; எழும் - உயர்ந்து விளங்கும் ; சுடரின் பின் புகுவார் - சிவத்தினோடு அடிஞானத்தால் அத்துவிதமாம் நிலையெய்தினவர்கள் ; முன்பு உகுவார் - முன்புள்ள மும்மலங்களும் நீங்கப்பெற்றோராய் ; பின் - அதன் மேலும் ; இன்பு உறுவார் - பேரின்பத்தையும் பொருந்துவார்.

சிவபிரானோடு அத்துவிதமாய் நிற்கும் நிலை கைவந்தவர்களே பாசங்களினின்றும் நீங்கிப் பேரின்பம் அடைவார்கள்.

2. இருவர் மடந்தையருக் கென்பயனின் புண்டா
மொருவ னொருத்தி யுறின்.

இருவர் மடந்தையருக்கு - இரண்டு பெண்கள் தம்மிற் புணர்ந்தால் அவர்களுக்கு; என்பயன் - இன்பமாகிய பயன் ஏது? (இல்லை); ஒருவன் - ஆணும்; ஒருத்தி - பெண்ணும்; உறின் - தம்மிற் புணர்ந்தால் மட்டுமே; இன்பு உண்டாம் - இன்பமாகிய பயன் உண்டு.

பிரமமும் ஆன்மாவும் ஒருபொருளாயின் ஆன்மாவுக்கு முத்தியின்பம் என்பது இல்லை.

3. இன்பதனை யெய்துவார்க்கு கீயு மவர்க்குருவ
மின்பகன மாதலினா லில்.

எய்துவார்க்கு - தன்னோடு புணர்ந்த ஆன்மாக்களுக்கு; இன்பதனை - தனது இன்பத்தினை ; ஈயுமவர்க்கு - கொடுக்கின்ற சிவனுக்கு; உருவம் - வடிவமே; இன்பகனம் ஆதலினால் - ஆநந்தமயமாகையால்; இல் - தான் இன்பத்தை யனுபவித்தலில்லை.

இன்பசொரூபியாகிய சிவம் இன்பத்தைக் கொடுக்கும்; ஆன்மா அதனையனுபவிக்கும்.

4. தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ யேகமெனக் கொள்.

தாடலைபோல் - தாள், தலை என்ற சொற்கள் தம்மிற் புணரும் போது ளகர தகரங்கள் டகர மாதல் போல; அவை கூடி - ஆன்மாவுஞ் சிவனும் புணர்தலால் ; தான் - ஆன்மபோதம்; வேறு நிகழா - தனிப்பட்டுத்

தோன்றாத; இன்பக் கூடலை - பேரின்பக் கலப்பினை; ஏகம் என - அத்துவிதமென்று; நீ கொள் - நீ அறிவாயாக.

'ள்', 'த' என்பவை புணர்தலால் வந்த 'ட' ஒரெழுத்துமல்ல, இரண்டெழுத்துமல்ல. அதுபோல சிவன் என்னும் பொருட்கும் ஆன்மா என்னும் பொருட்கும் அழிவுவராமல் அவை கலந்து நிற்றலே இரண்டறக்கலந்து நிற்றலாம். அதுவே அத்துவிதமுமாம்.

5. ஒன்றாலு மொன்றா திரண்டாலு மோசையெழா
தென்றாலு மோரிரண்டு மில்.

ஒன்றாலும் - அத்து விதமென்பது ஏகமென்று பொருள்படுமென்றால்; ஒன்றாது - (ஆன்மசிவங்களுக்குள்) கலத்தலென்பதில்லை இரண்டாலும் - அத்துவிதமென்பது இரண்டு என்று பொருள்படுமென்றால்; ஓசை எழாது - (ஆன்மாவுக்கு முத்தியுண்டு) என்னும் பிரஸ்தாபம் வேதத்தில் வந்திராது; என்றாலும் - ஆயினும்; ஓரிரண்டும் இல் (பொருட்டன்மையால் வேறாயும் கலப்பால் ஒன்றாயுமிருத்தலின்) அத்துவிதமென்பது ஒன்றுமன்று; இரண்டு மன்று.

அத்துவித மென்பது ஒன்று மன்று:
இரண்டுமன்று: பொருட்டன்மையால் வேறாயும்
கலப்பால் ஒன்றாயுமிருக்கும் நிலை.

6. உற்றாரும் பெற்றாரு மோவா துரையொழியப்
பற்றாரு மற்றார் பவம்.

உற்றாரும் - பேரின்பமயமாகிய முத்தியையடைந்தவர்களும்; பெற்றாரும் - (அதற்கு நேரே காரணமாகிய) சமாதி நிலையையடைந்தவரும்; ஓவாது - அழியாமல்; உரை ஒழிய - (அவ்விருதிறத்தினரும் போல்) வாக்கிறக்கும்படி; பற்றாரும் - கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் நிலைகளைப் பற்றினவரும்; பவம் - சநநமரணங்களை; அற்றார் - நீக்கினவராவார்.

இம்மூவகையினருக்கும் பிறப்பிறப்பில்லை.

7. பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே
நீயொன்றுஞ் செய்யாம னில்.

பேய் ஒன்றும் தன்மை - பேய் ஒருவனை யாவேசிப்பது போலச் சிவன் உன்னைக் கவர்ந்து கொள்ளுந் தன்மை; பிறக்கும் அளவும் - உனக்கு உண்டாகும் வரை; நீ ஒன்றும் செய்யாமல் - நீ யாதொரு செயலையுஞ் செய்யாமல்; நில் - அசைவற்று நிற்பாயாக.

நீ செய்ய வேண்டிய சாதனைகளை யெல்லாஞ் செய்து முடித்தபின் சிவன் உன்னையாண்டு கொள்ளும் வரை மேலுஞ் செய்ய வேண்டிய சாதனை உனக்கு ஒன்றுமில்லை. ஆகையால் அவனையே பார்த்துக்கொண்டு வேறொன்றுஞ் செய்யாமலிரு.

8. ஒண்பொருட்க ணுற்றார்க் குறுபயனே யல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போற் காண்.

ஒள் பொருட்கண் உற்றார்க்கு - ஞானாகரமான சிவத்தையடையப் பெற்றார்க்கு; உறுபயனே அல்லாது - ஆண்டுப் பொருந்துகின்ற பயனாகிய இன்பந் தவிர (ஏனைச் சமயாசாரங்களெல்லாம்) கண்படுப்போர் - உறங்குகின்றவரது; கைப்பொருள்போல் - கையிலுள்ள பொருள் தானே நழுவுவது போல்; காண் - (நழுவியில்லாமற் போதலை) நீ யறிவாயாக.

இந்நிலையிலுள்ளார்க்குச் சமயாசாரங்கள் தாமாக நழுவி விடும்; மூடஞானிகள் மட்டும் அவைகளைத் தாமாக நீக்கிக் கொள்ளுவார்கள்.

9. மூன்றாய தன்மையவர் தம்மின் மிகமுயங்கித்
தோன்றாத வின்பமதென் சொல்.

அவர் தம்மின் - ஆன்மாவும் சிவமும் தம்முள்; மிக முயங்கி - அறக் கலந்து; மூன்று ஆயதன்மை - ஞாதுரு, ஞானம், ஞேயம் என்னும் மூன்று தன்மைகளும்; தோன்றாத இன்பம் அது - தோன்றாமல் (ஆன்மா) அனுபவிக்கும் இன்பம்; என் சொல் - எவ்வாறு வாக்கினாற் கூறமுடியும்.

காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்னும் திரிபுடியற்ற விடமே பேரின்பம் பிறக்குமிடம்.

10. இன்பி னினிதென்ற லின்புண்டே லின்றுண்டா
மன்பு நிலையே யது.

இன்புஉண்டேல் - ஒருவர்க்கு அன்பு இருக்குமானால்; இன்பில் - இன்பங்களுக்கெல்லாம்; இனிது என்றல் - மிகவும் இனிய தெனப்படும் முத்தியின்பம்; இன்று உண்டாம் - அவருக்கு உடனேயெய்தும் (ஏனெனில்); அது - அம்முத்தியின்பம்; அன்பு நிலையே - அன்பையே தனக்கு நிலைக்களமாகவுடையது. (என்க).

பத்தியே முத்திக்குச் சிறந்த வித்து.

9. ஐந்தெழுத்தருள் நிலை.

1. *அருணூலு மாரணமு மல்லாது மைந்தின்*
பொருணூ றெரியப் புகின்.

தெரியப் புகின் - ஆராயப்புகுந்தால்; அருள் நூலும் - சிவாகமங்களும்; ஆரணமும் - வேதங்களும்; அல்லாதும் - இவைகளையொழிந்த ஏனைய ஞான நூல்களும்; ஐந்தின் - பஞ்சாக்கரத்தின், பொருள் நூல் - பொருளையேபற்றிப் பேசும் நூல்களாம்.

எல்லா நூல்களும் பஞ்சாக்கரத்தைப் பற்றியே பேசும்.

2. *இறைசத்தி பாச மெழின்மாயை யாவி*
யுறநிற்கு மோங்காரத் துள்.

இறை - சிவமும் (சி); சத்தி - அருளும் (வ); ஆவி - உயிரும் (ய); எழில்மாயை - அழகிய திரோதான சத்தியும் (ந); பாசம் - ஆணவமலமும் (ம); ஓங்காரத்துள் - ஐந்தெழுத்தே ஒரெழுத்தாகிய பிரணவத்துள்ளே; உற நிற்கும் - பொருந்தியிருக்கும்.

பஞ்சாக்கரத்தில் ஐந்து பொருள்கள் அடங்கியுள்ளன.

3. *ஊன நடன மொருபா லொருபாலா*
ஞானநடந் தானடுவே நாடு.

ஒரு பால் - ஒரு பக்கத்தில்; ஊன நடனம் - நகரமகரங்களாகிய ஊனக்கூத்தும்; ஒரு பால் - மற்றொரு பக்கத்தில்; ஞானநடம் - சிகரவகரங்களாகிய ஞானக்கூத்தும்; ஆ(க) - பொருந்திநிற்ப; நடுவே - இவ்விருபக்கத்துக்கும் நடுவில்; தான் - ஆன்மா (இருப்பதாக); நாடு - நீ விசாரித்தறிந்துகொள்வாயாக.

பிறப்பிறப்பிலழுத்துவது ஊன நடனம்;
வீட்டின்பத்திலிருத்துவது ஞான நடனம்.

4. *விரியமந மேவியவ்வை மீளவிடா சித்தம்*
பெரியவினை தீரப் பெறும்.

ந மேவி - திரோதான சத்திபொருந்தி; ம விரிய - மலந் தொழிற்பட; ய வை - (அது) ஆன்மாவை; மீளவிடா - (தன்னைவிட்டு) விலகவிடாமல் பிறப்பிறப்பிலழுத்தும்; தம் பெரிய வினைதீர - ஆன்மாக்கள் தம்பெரிய பிணியாகிய மலந்தொலையவும்; சி பெறும் - சிவத்தையடையும்.

பஞ்சாக்கரம் ஆன்மாவினது பந்தத்தையும் விடுதியையும் உணர்த்துகின்றது.

5. மாலார் திரோத மலமுதலா மாறுமோ
மேலாசி மீளா விடின்.

சி மேல் ஆ - சிகரம் முதலில் வரும்படி; மீளா விடின் - மாற்றியுச் சரியாமலிருந்தால்; மால் ஆர் - மயக்கம் பொருந்திய; திரோதம் - நகரமும்; மலம் - மகரமும்; முதல் ஆ - முதலாயின; மாறுமோ - நீங்குமோ? (நீங்கமாட்டா).

வீட்டை விரும்புவோர் நகரமகரங்களை முதலில் வைத்து உச்சரித்தல் கூடாது.

6. ஆராதி யாதார மந்தோ வதுமீண்டு
பாராது மேலோதும் பற்று.

ஆர் ஆதி ஆதாரம் - ஆன்மதாரகமாயிருப்பவர் யார்? சிவமன்றோ!; அது (அங்ஙனமாகவும்) சிகரத்தை; மீண்டு - திரும்பவும்; பாராது - விசாரியாமல்; மேல்ஓதும் - நகர மகரங்களை முதலில் வைத்து உச்சரிக்கின்ற ; பற்று - விருப்பமானது; அந்தோ! - இரங்கத்தக்கதாகும்.

நகர மகரங்களை முதலில் வைத்து உச்சரித்தல்
சநநமரண துக்கத்தைத்தரும்.

7. சிவமுதலே யாமாறு சேருமேற் நீரும்
பவமீதுநீ யோதும்படி.

சிவ முதலே - சிகரவகரங்கள் முதலிலே; ஆமாறு - பொருந்தும்படி; சேருமேல் - உச்சரித்தல் கூடுமாயின்; பவம் தீரும் - பிறவித்துன்பம் நீங்கும்; இது - இந்த முறையே; நீ ஓதும்படி - வீட்டை விரும்பும் நீ உச்சரிக்க வேண்டிய முறையாகும்.

பிறவி நீங்கி வீடடைய விரும்புவோர் சிகரவகரங்ளை முதலில் வைத்துச்சரித்தல் வேண்டும்.

8. வாசி யருளியவை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு.

வா - திருவருள்; யவை - ஆன்மாவை; சி அருளி - சிவத்திற் சேர்த்து; வாழ்விக்கும் - வீட்டின்பத்திலே யிருத்தும்; மற்று - அன்றியும்; அதுவே - அத்திருவருளே; அங்கு - அச்சிவத்திற்கு; ஆசு இல் உருவமும் ஆம் - குற்றமற்ற திருமேனியாகவுமிருக்கும்.

வகரம் ஆன்மாவைச் சிவத்தோடு சேர்த்தலும், சிவத்துக்குத் திருமேனியாதலும் ஆகிய தொழிலையுடையது.

9. *ஆசினவா நாப்ப ணடையா தருளினால்*
வாசியிடை நிற்கை வழக்கு.

ஆசின் ந - திரோதான சத்தியாகிய நகாரத்திற்கும்; வா - அருளுக்கும்; நாப்பண் - நடுவில் ; அடையாது - ஆன்மா (ய) நில்லாமல்; அருளினால் - திருவருளுபகாரத்தால்; வாசி இடை - வகாரத்திற்கும் சிகாரத்திற்கும் நடுவில்; நிற்கை - பொருந்தி நிற்றல்; வழக்கு - முறையாகும்.

யகரம் சிகரத்திற்கும் வகரத்திற்கும் நடுவில் நிற்றலே முத்தி நிலையாகும்.

10. *எல்லா வகையு மியம்பு மிவனகன்று*
நில்லா வகையை நினைந்து.

இவன் - ஆன்மாவானது; அகன்று நில்லா வகையை - சிவத்தையுஞ் சத்தியையும் விட்டு நீங்கி நில்லாதுடனாய் நிற்குந் தன்மையை; நினைந்து - கருதியே; எல்லா வகையும் - எவ்வகைப்பட்ட ஞான நூல்களும்; இயம்பும் - பேசுவதாகும்.

எல்லாச் சாத்திரங்களும் இந்த வகையான சுத்தாத்து விதத்தையே விளக்கும்.

10. அணைந்தோர் தன்மை.

1. *ஒங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத்*
தூங்குவர்மற் றேதுண்டு சொல்.

ஒங்கு உணர்வின் உள் - நிறைந்த ஞானத்தினுள்ளே; ஒடுங்கி - தாம் அடங்கி; உள்ளத்துள் - தம் அறிவினுள்ளே; இன்பு ஒடுங்க - பேரின்பம் அடங்கும்படி; தூங்குவர் - (முத்தர்) ஆநந்த நித்திரை செய்துகொண்டிருப்பார்கள்; ஏதுஉண்டு - அவரைப் பற்றிப் பேசவேறென்ன விருக்கிறது? சொல் - நீ சொல்வாயாக.

முத்தர் சிவாநந்தக்கடலில் அழுந்தித் தம்மை யிழப்பார்.

2. *ஐந்தொழிலுங் காரணர்க ளாந்தொழிலும் போகநுகர்*
வெந்தொழிலு மேவார் மிக.

ஐந்தொழிலும் - பஞ்ச கிருத்தியங்களை யேனும்; காரணர்கள் ஆம் தொழிலும் - பிரம விட்டுணுமுதலியவர்களாலாகும் தனித்தனித் தொழில்களையேனும்; போகம்நுகர் - மாயாபோகத்தை நுகர்தற்குரிய; வெம் தொழிலும் - கொடியவினைகளையேனும்; மிக மேவார் - (அவர்) சிறிதுஞ்செய்யார்.

முத்தர் சிவத்தின் இன்பத்தை யனுபவிப்ப தொன்றைத்தவிர சிவத்தின் தொழில்களில் எதனையுஞ் செய்யமாட்டார்.

3. *எல்லா மறியு மறிவுறினு மீங்கிவரொன்*
றல்லா தறியா ரற.

எல்லாம் அறியும் அறிவு - இயல்பினால் எல்லாவற்றையும் அறிகின்ற சிவஞானத்தை; ஈங்கு இவர் - இவ்விடத்தில் முத்தர்; உறினும் - பொருந்தினாலும்; ஒன்ற அல்லாது - அந்தச்சிவஞானானந்த மொன்றை யன்றிப்பிறவற்றை; அற அறியார் - சிறிதும் அறியமாட்டார்.

முத்தர் சிவம் ஒன்றையே கண்டிருப்பார்; வேறொன்றையும் காணமாட்டார்.

4. *புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்*
தலநடக்கு மாமை தக.

தலம் நடக்கும் ஆமை தக - தரையிலே நடக்கும் ஆமை, கால் முதலியவற்றைத் தன் ஓட்டிற்குள் அடக்கிக்கொள்ளுதல் போல, புலன் அடக்கி - (முத்தர்)விடயங்களிற் செல்லவொட்டாமல் உணர்வினையடக்கி; தம் முதற்கண் - தமது முதல்வனாகிய சிவத்தினிடத்திலே; புக்கு உறுவர் - புகுந்து பொருந்தியிருப்பார்கள்; போதார் - அதைவிட்டு என்றும் நீங்குதல் செய்யார்.

முத்தர் பிரபஞ்ச விடயத்தைக்கண்டஞ்சி சிவத்தி லொழித்துக் கொள்ளுவர்.

5. *அவனையகன் றெங்கின்றா மாங்கவனா மெங்கு*
மிவனையொழிந் துண்டாத லில்.

அவனை அகன்று - இறைவனை நீங்கி; எங்கு - எந்தவுலகமும்; இன்று ஆம் - இல்லையாகும்; ஆங்கு - அதுபோல; அவன் ஆம் இவனை - சிவனான முத்தரை; ஒழிந்து - நீங்கி; எங்கும் - எந்த வுலகமும்; உண்டாதல் இல் - உளதாதல் இல்லை.

முத்தான்மாக்களும் வியாபகமாய் நின்றே இன்பம் நுகரும்.

6. *உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்*
கெள்ளுந் திறமேது மில்.

உள்ளும் புறம்பும் - உள்ளேயும் வெளியேயும்; ஒருதன்மைக் காட்சியருக்கு - ஒரே தன்மைத்தாய் நிற்கும் ஞானத்தினையடைந்த வருக்கு; எள்ளும் திறம் - எதனையும் இகழுந்தன்மை; ஏதும் இல் - சிறிதாயினும் இல்லை.

முத்தருக்கு எல்லாஞ் சிவமாய்த் தோன்றும்.

7. உறுந்தொழிற்குத் தக்க பயனுலகந் தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்.

தம் தம் - அவரவரது; உறும் தொழிற்கு - (யான் எனதென்னும் செருக்குப்) பொருந்திய வினைகளுக்கு; உலகம் - உலக வாழ்க்கைகளே; தக்க பயன் - தகுந்த பயன்களாக வரும்; வறும் தொழிற்கு - (யான் எனதென்னுஞ் செருக்கு) அற்று நிகழும் வினைகளுக்கு; வாய்மை - அழியாத வீட்டின்பமே; பயன் - பயனாகவரும்.

முத்தர் யாதொரு செயலுஞ் செய்யார்.

8. ஏன்ற வினையுடலோ டேகுமிடை யேறும்வினை
தோன்றி லருளே சுடும்.

ஏன்ற வினை - பிராரத்தகருமமானது; உடலோடுஏகும் - உடலுழாய்த் தொலையும்; இடை ஏறும் வினை - ஆகாமிய கருமமானது; தோன்றில் - உளதாயின்; அருளே சுடும் - (அதனை) அருள் என்னும் நெருப்பே சுட்டுவிடும்.

முத்தருக்குக் கருமமலபந்தம் நாசமாகும் விதம் இது.

9. மும்மை தருவினைகண் மூளாவா மூதறிவார்க்
கம்மையு மிம்மையே யாம்.

மூதறிவார்க்கு - அப்பேரறிவாளர்க்கு; மும்மை - இப்பிறப்பு, மேலுலகடைதல், திரும்ப வரும் பிறப்பு என்னும் மூன்று பயனையும்; தரும் வினைகள் - கொடுக்கும் வினைகள் யாவும்; மூளாவாம் - உண்டாதலில்லை; அம்மையும் - அவர்களுக்குப் பரமுத்தியும் ; இம்மையேஆம் - உடம்பிருக்கையிலேயே உண்டாய்விடும்.

முத்தருக்குக் கருமமலபந்த மில்லையாகவே பரமுத்தியும் ஜீவன் முத்தி நிலையிலேயே யுண்டாய்விடும்.

10. கள்ளத் தலைவர் துயர்க்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக.

கள்ளத் தலைவர் - யான் எனது என்னும் வஞ்சத் தலைமையினையுடைய ஆன்மாக்களது; துயர் கருதி - துன்பத்தினையெண்ணி; தம் கருணை வெள்ளத்து - தம்மிடத் தெழுந்த கருணை யென்னுங் கடலினுள்ளே; மிக அலைவர் - (முத்தர்) மிகவும் அலைந்து கொண்டிருப்பார்.

முத்தர் ஆன்மாக்கள்படும் பிறவித் துன்பத்தைக் கண்டு கருணைமேலிட்டால் ஐயோ! என்றிரங்கிக் கொண்டிருப்பார்.

திருவருட்பயன் பதவுரை முற்றிற்று.

சைவ சித்தாந்த சபையில்
நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள்

இடம் : செயலர் இல்லம், 246, வடக்கு ரதவீதி,
சங்கரன்கோவில்.

பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும்

காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை

தேவாரப் பயிற்சி வகுப்பு

பிரதி புதன் கிழமை தோறும்

இரவு 7.00 மணி முதல் 9.00 மணி வரை

சாத்திர வகுப்பு

பிரதி சனிக் கிழமை தோறும்

மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை

மிருதங்கப் பயிற்சி வகுப்பு

இடம் : திருவாவடுதுறை ஆதீன மடாலயம்,
மேலரதவீதி, சங்கரன்கோவில்.

பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும்

இரவு 7.00 மணி முதல் 9.00 மணி வரை

சாத்திர & புராண வகுப்பு

மாதந்தோறும் சபையின் சார்பாக சிவாயைங்களில்
உழவாரப்பணி நடைபெறுகிறது.

அனைவரும் சபை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு
பயனடைய வேண்டுகிறோம்.

ரவி கம்ப்யூட்டர்ஸ், சங்கரன்கோவில். 98427 - 59704